## அம்பாந்தோட்டை பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

-----------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.2, 1.3.3 மற்றும் 1.3.5 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கு வைக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காக கிடைக்கப் பெற்ற ரூபா 510,000 ஆன கலிபவுசர் வருமானம் பெறவேண்டிய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமைால் ஆண்டின் இறுதியில் அப்பெறுமதி மேலும் கிடைக்க வேண்டிய மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிர்மாண வேலை கடன்படடோர் மீதிக்கு உள்ளடக்கப்படாதிருந்த நிர்மாணமொன்றிற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,192,271 தொகை திரண்ட நிதிக்கு சீராக்கம் செய்யப்படாமல் நானாவித வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குரிய ரூபா 4,183,555 ஆன முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இரண்டு மாதங்களுக்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 29,500 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் உலர் வலய தாவரவியல் பூங்கா அருகில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடத்தை அமைப்பதற்குரிய நிர்மாண வேலைக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 535,996 ஆன பிடிகாசு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 இன் மாகாண நிச்சயிக்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் கீழ் ரூபா 2,049,788 செலவில் செயற்படுத்தப்பட்டிருந்த 9 நிர்மாண வேலைகளின் மீளாய்வாண்டின் வருமானங்களிலிருந்தும் செலவினங்களிலிருந்தும் விடுபட்டிருந்தன.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்வதற்குள்ள ஒப்பந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 2,913,587 தொகை கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 13,463,162 ஆன சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

சபையினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,299,728 தொகையான முத்திரை வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர் வரி என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 20,835,940 தொகையான கட்டிடங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துப் பதிவேடும் விரிவான அட்டவணைகளும் ரூபா 3,102,218 தொகையான நிலுவை வீதவரி, நிலுவை வியாபார அனுமதிப்பத்திரங்கள், நிலுவை கடை வாடகை, நிலுவை நிர்மாணக் கடன்பட்டோர் மற்றும் நிலுவை ஆதனக் கடன் வட்டிக்குரிய அட்டவணைகளும் காலப்பகுப்பாய்வும், ரூபா 5,760,320 கூட்டுத்தொகையான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் முற்பணங்களுக்குரிய பதிவேடுகள், அட்டவணைகளும் காலப்பகுப்பாய்வும், ரூபா 1,225,552 கூட்டுத்தொகையான பொது வழங்கல் கடன்கொடுத்தோர் மற்றும் நானாவித கடன்கொடுத்தோருக்குரிய அட்டவணைகளும் காலப்பகுப்பாய்வும், சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக ரூபா 110,695 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பிரிவு | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்காமல் மாற்றப்பட்ட பிரயாணச் செலவினப் படிகள் பெற்றுக்கொண்டிருந்த 04 வெளிக்கள உத்தியோகத்தர்கள் சபையின் கெப் வண்டியை |

பயன்படுத்தி எரிபொருளுக்காக ரூபா 47,721 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 103, 104, 105 மற்றும் 110 | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் விபத்துக்களுக்கு உட்பட்டிருந்த கெப் வண்டியினதும் கலிபவுசரினதும் திருத்த வேலைகளுக்காக முறையே ரூபா 243,723 தொகையும் ரூபா 28,950 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(3) | 2007 ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,534,476 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் இரண்டு சமூக சபைகளுக்கு இரண்டு தகர கூடாரங்கள் வழங்குவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 190,900 செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 6,205,097 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,633,865 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,838,962 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிலும் சுயமான வருமானமீட்டலில் குறைவொன்று தென்பட்டதுடன், சபையின் மீண்டெழும் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்த மட்டத்தில் பேணிச் செல்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் போதும் சுயமான வருமானமீட்டல்களை விஞ்சி கருத்திற் கொள்ளக்கூடியளவு பெறுமதியில் மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மீளாய்வாண்டின் போது வருமானத்திலும் செலவினம் இரண்டு மடங்களவில் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 ஆதன வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான நிலுவை ஆதன வரி வருமானம் ரூபா 937,460 ஆக இருந்ததுடன், ஆண்டின் இறுதியில் அம்மீதி ரூபா 1,213,900 வரை அதிகரித்திருந்தது. வீதவரி அறவீடு குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும், நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) (அ) ஆம் பிரிவின் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கடை வாடகை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 40,983 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 40,483 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தது. அந்நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சூரியவெவ 100 அடி வீதியின் திஸ்ஸபுர 12 கடைகளுக்காக மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 736,929 தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ஆண்டின் இறுதியில் ரூபா 803,979 வரை அதிகரித்திருந்த போதிலும், அக்கட்டணங்களை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149, 150 மற்றும் 152 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நூற்றுக்கு 01 சதவீத வரி அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 2012 செப்தம்பர் 20 ஆந் திகதி முதல் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரியை அறவிடுவதற்காக சபையினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,381,995 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 12,041,708 தொகையும் கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

வருடாந்த பாதீட்டில் பௌதீக திட்டமிடல், சிறு வீதிகள், காணி மற்றும் கட்டிடங்கள் ஆகிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 15,800,000 ஆன மூலதன வருமானமும் ரூபா 17,500,000 மூலதனச் செலவினமும் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அம் மூலதன வருமானம் உழைக்கப்படுகின்ற விதம் மற்றும் எந்த விடயங்களுக்காக மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்படுமென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

உறுப்பினர்களின் கடமைகளுக்காக அரசினால் சலுகை அடிப்படை பேரில் மோட்டார் சைக்கில்கள் மற்றும் மாதமொன்றுக்கு ரூபா 3,000 வீதம் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஐந்து உறுப்பினர்களுக்கு 42 சந்தர்ப்பங்களில் சபையின் கெப் வண்டி வழங்கப்பட்டு ரூபா 101,471 ஆன எரிபாருள் செலவினம் செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 PF – 3363 ஆம் இலக்க கெப் வண்டியின் எரிபொருள் பயன்பாடு

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எரிபொருள் தாங்கியின் இயலளவு 80 லீற்றர்களாக இருந்த போதிலும், அந்த அளவை மிகைத்து 2015 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் அசாதாரணமாக தாங்கியில் எரிபொருள் எஞ்சியிருந்தமை ஓட்டக் குறிப்புக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த அளவு 88 லீற்றர் முதல் 136 லீற்றர் வரையன வீச்சில் காணப்பட்டன.

(ஆ) தேவையான அளவினை இனங்காணாமல் கெப் வண்டியின் எரிபொருள் தாங்கியின் இயலளவை விஞ்சி 1777.3 லீற்றர் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 205,471 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 மார்ச் 11 ஆந் திகதிய ஹப்பா/ஏ/வாகனம்/பொது ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் லீற்றரொன்றுக்கு 9 கிலோ மீற்றர் என எரிபொருள் சமப்படுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காமல் லீற்றரொன்றுக்கு 8 கிலோ மீற்றர் வீதம் எரிபொருள் சமப்படுத்தப்பட்டமையால் 383 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 36,385 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**மின் உபகரணங்கள் கொள்வனவு**

சபையினால் வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக ஆண்டில் நான்கு சந்தர்ப்பங்களில் ரூபா 512,000 கூட்டுத்தொகையான செலவில் 23 வொட் அளவின 1600 CFL மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. CFL மின்குமிழ்களுக்காக உத்தரவாதக் காலம் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டமையால் மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபைக்குரிய 03 உழவு இயந்திரங்களுக்காக மழை மேவுகையொன்று அமைப்பதற்கு இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 150,140 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது, 2006 அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 பிரிவின் பிரகாரம் இவ்வாறான செயற்பாடொன்றிற்காக சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட முடியுமான போதிலும், அவ்வாறு செய்யாமல் தேசிய போட்டி விலை கோரலுக்காக பத்திரிகை அறிவித்தலை வெளியிடுவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 48,266 செலவிடப்பட்டிருந்தது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக ரூபா 30,000 செலவில் வழங்கப்பட்டிருந்த 2000 லீற்றர் நீர்த்தாங்கி 2015 நவம்பர் மாதம் 24 ஆந் திகதி காணாமல் போனமை தொடர்பில் செயற்திட்டத்தின் காவலாளி பொறுப்பினை ஏற்றிருந்த போதிலும், குறித்த பணத்தை அறவிடுவதற்கு 2016 மே 17 ஆந் திகதி வரை தாமதமாகியிருந்தது.

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - 2015

தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகையான முதலாவது தவணை 2015 யூன் 17 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்ததுடன், நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் செலவிடுவதற்கு 2016 சனவரி 14 ஆந் திகதி அளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2015 ஏப்ரல் 28 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்த ரூபா 5 மில்லியன் பணம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - 2014

தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 08 செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையால் மொத்தம் ரூபா 3,973,017 தொகையொன்று 2016 சனவரி 14 ஆந் திகதி அளவிலும் சபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அளவிலும் அதில் ரூபா 1,267,480 மீளளிக்கப்பட்டிருப்பதாக செயலாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.5 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐந்து பதவிகளில் எட்டு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஐந்து பேர் மிகையாக காணப்பட்டனர். வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 62 செலவின விடயங்ளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,641,200 தொகையான முழு நிதிஏற்பாடும் மேலும் 29 செலவின விடயங்களில் நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 4,534,250 செலவினங்களும் 02 வருமான விடயங்களில் அடையப் பெறாத ரூபா 43,201,479 இலக்கும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெபர்வரி 24 ஆந் திகதிய தபப/யஹ/01/ந.வ.லே ஆம் இலக்க தென் மாகாண சபை உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

ஐந்தொகையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 2,526,265 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் சரியான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,514,759 ஆக இருந்தது. அம்மீதியில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 5,234,244 மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்தக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்